26-1-2009





## கிராமப்புற மாணவர்களுக்கான

# கலை அறிவியல் விழா படப்பச்சையில் நடந்தது

குமரி அறிவியல் பேரவையும் களியல் டி.எம் கான்வென்டு புனிததோமையார் சமூகசேவை மையமும் இணைந்து படப்பச்சையில் குடியரசு தினத்தை முன்னிட்டு கிராமப்புற மாணவர்களுக்கான கலை அறிவியல் விழாவை நடத்தியது.





பல்வேறு கிராமங்களில் உள்ள பள்ளி மாணவர்கள் கலந்து கொண்ட விழாவில் கலை நிகழ்ச்சிகள் அறிவியல் விழிப்புணர்வு நிகழ்வுகள் நடைபெற்றது. காலையில் தேசியக்கொடியை தமிழ்நாடு நற்பணி மன்றத்தலைவர் பி.கே.





சிந்துகுமார் ஏற்றிவைத்து சிறப்புரையாற்றினார். குடியரசு தின விழா ஊர்வலத்தை அண்டுகோடு மேல்நிலைப்பள்ளியின் ஆசிரியர் சதீஸ்குமார் தலைமைவகித்து நடத்தினார்கள். தேசியபசுமைப்படை ஒருங்கிணைப்பாளர் ஜோபிரகாஷ் பேரணியைத் தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். பின்பு நடந்த





பொதுக்கூட்டத்திற்கு பேராசிரியர் இரா. தியாகசுவாமி தலைமை வகித்தார். முன்னாள் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலர் திருவேங்கடம், குமரி அறிவியல் பேரவை அமைப்பாளர் முள்ளஞ்சேரி மு.வேலையன் பொறியாளர் விவரம் ஆகியோர் சிறப்புரையாற்றினார். மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது.



குடும்பத்தைப் பொறுப்புடன் பேணுவர்கள் தாத்தா பாட்டியா? தாயா? தந்தையா? மகனா? மகளா? என்னும் தலைப்பில் விவாத அரங்கத்தை முள்ளஞ்சேரி மு.வேலையன் நடத்தினார். ஏஞ்சல், ஜனதா, லீலா, உஷா, சாந்தி



ஆகியோர்கள் வாதாடினார்கள். குடும்பத்தை பொறுப்புடன் பேணுவர்கள் தாத்தாபாட்டிகள் என நடுவர் தீர்ப்பு வழங்கினார். முன்னதாக டி.எம் கான்வென்ட் அருள்சகோதரி மரியட்டா அனைவரையும் வரவேற்றார் லீலாபாய் நன்றி கூறினார்.










முள்ளஞ்சேரி.மு.வேலையன்,

அமைப்பாளர்,

குமரி அறிவியல் பேரவை,

முளங்குழி அஞ்சல்,

குமரிமாவட்டம். செல்:9942758333








